# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 12.05.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16021/B/2022**

திரு.M.முத்துமணி — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
பொள்ளாச்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றியம்,
கோயம்புத்தூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

1. இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 11.09.2025, 12.12.2025 ஆகிய தினங்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக, 12.12.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது:

"1.*இவ்வாணை கிடைக்கப்பெற்ற 20 நாட்களுக்குள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள், சம்மந்தப்பட்ட அன்றைய பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டு அலுவலர் ஆகிய இருவருக்கும் அழைப்பாணை அனுப்பி, நேரில் வரவழைத்து, மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் ஏன் தகவல்கள் வழங்கப்படவில்லை என்று விசாரணை செய்து, வீணாக கால தாமதத்தை ஏற்படுத்திய அன்றைய பொதுத் தகவல் அலுவலர், அன்றைய மேல்முறையீட்டு அலுவலர் ஆகிய இருவரின் மீதும் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)-இன் கீழ் ஏன் அதிகபட்ச அபராதமாக ரூ.25,000/- விதிக்கக் கூடாது என்பதற்கும், சட்டப்பிரிவு 20(2)-இன் கீழ் ஏன் அவர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்ககூடாது என்பதற்கும், சட்டப்பிரிவு 19(8)(b)-இன் கீழ் ஏன் இழப்பீடு விதிக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை பெற்று, அவர்கள் இருவரின் மீதும் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று இவ்வாணையத்திற்கு பரிந்துரை செய்து, அதனை ஒரு அறிக்கையாக தயார் செய்து, அந்த அறிக்கையை இவ்வாணையத்திற்கு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), பொள்ளாச்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றியம் அவர்கள் மூலம் 12.05.2026 அன்று நேரடியாக சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.*

*2. மேற்கூறியவாறு, மனுதாரர் தனது சட்டப்பிரிவு 6(1) மனுவில் இனம் 12-இல் கோரியுள்ள நாட்குறிப்பு குறித்து தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரிய பின்னர், பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), பொள்ளாச்சி (தெற்கு) அவர்கள், அதனை மனுதாரருக்கு சட்டப்பிரிவு 7(6)-இன் கீழ் கட்டணம் ஏதுமின்றி, சான்றொப்பமிட்டு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவுத் தபால் மூலம் மனுதாரருக்கு அனுப்பி, அதனை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலையும், மனுதாரருக்கு வழங்கிய தகவல்களையும் இணைத்து ஒரு*

*அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), பொள்ளாச்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றியம் அவர்கள் 12.05.2026 அன்று நேரடியாக சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.”*

2. மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இன்று (12.05.2026) திருமதி.M.சந்தோசம், பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), பொள்ளாச்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, 11.05.2026 தேதியிட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை), கோயம்புத்தூர் (கிழக்கு) அவர்களின் அறிக்கையையும், 12.05.2026 தேதியிட்ட தனது அறிக்கையையும் ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

3. மேற்படி சமர்ப்பிக்கப்பட்ட பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையை பரிசீலனை செய்யப்பட்டதில், மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி, மனுதாரர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் இனம் 12-இல் கோரியுள்ள நாட்குறிப்பு குறித்து மனுதாரர் தனக்கு தேவைப்படும் தகவல்களை குறிப்பிட்டுக்கோரி 12.12.2025-ம் தேதி முதல் நாளதுவரை தேவைப்படும் தகவல்கள் குறிப்பிட்டு விண்ணப்பம் ஏதும் அளிக்கவில்லை என்றும், எனவே, மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே, மனுதாரர் தனக்கு வழங்கப்பட்ட வாய்ப்பை சரிவர பயன்படுத்திக்கொள்ளாததை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

4. மேலும், மேற்படி பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை), கோயம்புத்தூர் (கிழக்கு) அவர்களின் அறிக்கையை இவ்வாணையம் பரிசீலனை செய்யப்பட்டதில், திரு.சக்திவேல், அன்றைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் திரு.வி.செந்தில்குமார், அன்றைய மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர் மனுதாரருக்கு உரிய காலத்தில் தகவல்கள் வழங்கப்பட்டதாகவும், மேலும் அம்மா திருமண மண்டபத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த ஊராட்சி ஒன்றிய கட்டிடத்தை பொள்ளாச்சி நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றிய தெற்கு அலுவலக கோப்புகள் அனைத்தும் மாறி மாறி இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் மனுதாரருக்கு வழங்கிய தகவல்களுக்குண்டான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக தற்போது கிடைக்கப்பெறவில்லை எனவும் அன்றைய பொதுத் தகவல் அலுவலரும், அன்றைய மேல்முறையீட்டு அலுவலரும் தெரிவித்துள்ளனர் என்றும், விசாரணையில் அன்றைய மேல்முறையீட்டு அலுவலர் திரு.வி.செந்தில்குமார் என்பவர் பணிமாறுதல் பெற்று 01.10.2022 முதல் பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலராக பணிமாறுதலில் சென்றுள்ளார் என்றும், அன்றைய பொதுத் தகவல் அலுவலர் திரு.கி.சக்திவேல், என்பவர் 08.06.2023 முதல் பணிமாறுதல் பெற்று ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) ஆக பணியேற்வு செய்து கொண்டார் என்றும், பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றிய தெற்கு அலுவலக கோப்புகள் அனைத்தும் இடமாற்றம் செய்யப்பட்ட போது இருவரும் மேற்காணும் அலுலகத்தில் பணியாற்றவிலை என தெரிவித்துள்ளனர் என்றும், மேற்காண் அலுவலர்கள் பணியாற்றிய காலங்களில் தகவல் ஆணையத்தின் எந்த ஒரு விசாரணைக்கு ஆட்படாமலும், எவ்வித குற்றச்சாட்டுகளும் எழா வண்ணம் பணியாற்றி உள்ளார்கள் என அவர்களது அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது என்றும் தெரிவித்து, எனவே மேற்கூறிய அலுவலகர்களை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். இதனை இவ்வாணையம் பதிவு செய்கிறது. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அலுவலகத்தை மாறும்போது அவ்வலுவலகத்தின் கோப்புகளை உரிய முறையில் பாதுகாப்புடன் மாற்றம் செய்து பராமரிக்க வேண்டியது ஒவ்வொரு அரசு அலுவலகளின் கடமையாகும். ஆனால், அவ்வாறு செய்யாமல், பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றிய தெற்கு அலுவலக கோப்புகள் அனைத்தும் மாறி மாறி இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் மனுதாரருக்கு வழங்கிய தகவல்களுக்குண்டான

ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக தற்போது கிடைக்கப்பெறவில்லை என்று மேற்படி தெரிவிப்பதை இவ்வாணையம் ஏற்க மறுக்கிறது. இது பொது அதிகார அமைப்பின் பொறுப்பின்மையையும், மெத்தன போக்கையும் குறிப்பதாக இவ்வாணையைம் கருதி, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

***இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள், பொள்ளாட்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றிய பொது அதிகார அமைப்பு மனுதாரருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-இன் கீழ் இழப்பீடாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) தொகையை நேரில் வழங்கி, அதனை மனுதாரர் பெற்றுக்கொண்ட விவரத்தை இவ்வாணையத்திற்கு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), பொள்ளாட்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றியம் அவர்கள் மூலம் 22.05.2026-க்குள் பதிவு தபால் மற்றும் மின்னஞ்சல் (sicbsec1@gmail.com) மூலம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***

**ஓம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**<u>வழக்கு எண். SA 16021/B/2022</u>**

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு:</u>

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
பொள்ளாச்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றியம்,
கோயம்புத்தூர் மாவட்டம் - 642001.

<u>மனுதாரர்:</u>

திரு.M.முத்துமணி,
3/178, கண்டிதோப்பு,
நல்லாம்பள்ளி,
கோலார்பட்டி அஞ்சல்,
பொள்ளாச்சி வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம் - 642107.

Copy to: File
AK/PC